**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 133/2025**

2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 20.01.2026 | | |
| பெயர்: | கலியமூர்த்தி (PW–1 Chief ) | தகப்பனார் பெயர்: | வீராசாமி |
| கிராமம்: | செம்பதனிருப்பு | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 73/2026 |

**முதல் விசாரணை : 20.01.2026**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 02.06.2022 தேதியிட்ட குயிலம்பாள் இறப்புச் சான்றிதழ் கணிணி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. குயிலம்பாள் வாரிசு சான்றிதழ் வேண்டி விண்ணப்பித்த மனுவின் சுய உறுதி மொழி **வா.சா.ஆ.2** ஆகவும்

3. 13.02.2023 தேதியிட்ட சீர்காழி வட்டாட்சியரால் திருப்பப்பப்பட்ட மனுவின் கணிணி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.